# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 772/2024**

**Deposition of Additional witness LW8 examined as PW3** Dt. 16.02.2026

| | |
|---|---|
| Name | அகோரம் (SI of Police) |
| Father's/Husband's Name | பஞ்சு |
| Village | பாகசாலை PS |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.02.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் பாகசாலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் துறையில் பணிபுரிந்த வகையில் உதவி ஆய்வாளர் முருகவேல் என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் போலீசார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளித்து இருப்பதால் நீதிமன்றத்தின் நேரம் கருதி கூடுதல் சாட்சியாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.05.2024–ம் தேதி காலை பாகசாலை உதவி ஆய்வாளர் முருகவேல் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது சாமிநாதன் மகன் நடராஜன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனு பெற்றுள்ளார். அந்த புகார்மனுவின் அடிப்படையில் பாகசாலை காவல் நிலைய குற்ற எண்.24/2024 இதச பிரிவுகள் 294(b), 427,506(1)–ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம், பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானர்களையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் குற்ற சம்பவம் உண்மை என தெரிய வந்த நிலையில் எதிரியை தேடிய போது கடந்த 23.05.2024 மதியம் 13.00 மணிக்கு பாகசாலை காவல்நிலையம் முன்பு ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 427, 506(1) ன் கீழ் குற்ற இறுதி

அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் விசாரணை அதிகாரி நீங்கள் இல்லை என்றால் சரிதான். கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதி கொடுத்த பொய்யான புகாருக்கு எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து போலியாக தயார் செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்னநேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

14/2/26
நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை